**தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 11 - நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 08 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்-**

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் கணக்கிடப்பட்டபோது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சிடப்பட்ட குறிப்புக்களின்படி, மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் , ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 800,142,912 ஆக காட்டப்பட்டிருந்ததுடன் நிதி நிலைமைக்கூற்றில் அப்பெறுமதி ரூபா 800,202,910 ஆக காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிதி அல்லாத சொத்துக்கள் மீதி ரூபா 60,000 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | இந்த ரூபா 60,000 வித்தியாசம் சொத்துக்கள் கைத்தவிர்ப்புடன் தொடர்பானது என்பதுடன் , இது சரியாகக் கணக்கிடப்பட்டாலும், சிகாஸ் படிவத்தில் ஏற்பட்ட பிழை காரணமாக, சொத்துக்கள் ரூபா 60,000 அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும்போது குறித்து கவனம் செலுததப்படும். | இறுதி திறைசேரி அச்சிடப்பட்ட குறிப்புக்களின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.. |

**(ஆ) கட்டுநிதி இணக்கக்கூற்று மீதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | ஏனைய வருமானத் தலைப்புக்களுக்காக ஆணைக்குழுவினால் ரூபா 2,785,832 ஆன வருமானத்தை வசூலித்திருந்தாலும், அது கட்டு நிதி இணக்ககூற்றில் பிற நிறுவனங்களால் ஆணைக்குழுவின் சார்பில் சேகரிக்கப்பட்ட வருமானமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | தவறொன்றின் மூலம் ஏனைய நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின் சார்பாக சேகரிக்கப்பட்ட வருமானமாக பதிவு செய்யப்பட்ட ரூபா 2,785,832 ஆனது ஏனைய நிறுவனங்களின் சார்பாக சேகரிக்கப்பட்ட வருமானமாக திருத்தப்பட வேண்டும். | கட்டுநிதி இணக்ககூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | கட்டு நிதி இணக்ககூற்றில் சேகரிக்கப்பட்டதாக காட்டப்பட வேண்டிய ஆணைக்குழுவினால் ஏனைய செலவுத் தலைப்புக்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 2,100,265 மற்றும் ஏனைய செலவினத் தலைப்புக்களின் மூலம் அரச அதிகாரிகளின் முற்பணம் ”பி” கணக்கில் செலவு வைக்கப்பட்ட ரூபா 446,560 கட்டு நிதி இணக்ககூற்றில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | தவறொன்றின் மூலம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: | கட்டுநிதி இணக்ககூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | கட்டு நிதி இணக்ககூற்றில் குறைத்தல்களாக காட்டப்பட வேண்டிய ஏனைய நிறுவனங்களால் ஆணைக்குழுவிற்காக செலவிடப்பட்ட ரூபா 65,460 மற்றும் ஏனைய நிறுவனங்களால் அரச அதிகாரிகளுக்கான முற்பணம் ”பி” கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள ரூபா 359,944 சேர்க்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | தவறொன்றின் மூலம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: | கட்டுநிதி இணக்ககூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மேற்படி அவதானிப்புகளின்படி, 2022 திசெம்பர் 31 இல் கட்டு நிதி இணக்ககசுற்றில் மீதி ரூபா 664,410 ஆன மறை பெறுமதியாக இருந்ததுடன் அது ரூபா 664,410 நேர் மீதியாக காட்டப்பட்டிருந்தது. இதனால் நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 664,410 ஆன மறை மீதிக்கு கட்டு நிதி இணக்ககசுற்றின் மீதி சமமாக இருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் கட்டு நிதி இணக்ககசுற்றில் மீதி ரூபா 664,410 ஆன மறை பெறுமதியாக திருத்தப்படும். | கட்டுநிதி இணக்ககசுற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.. |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆணைக்குழுவின் அதிகாரச் சட்டத்தின் தயாரிப்பு நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய புதிய அரசியலமைப்பு திருத்தத்தின் பின்னர் இந்த விடயத்தில் மேலதிக பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதால், அதுவரை அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள விதிகளின்படி செயற்படுமாறு ஆணைக்குழுவின் தலைவரிடமிருந்து எமக்கு அறிவுறுத்தல் கிடைத்துள்ளது. | அதிகாரச் சட்டத்தை தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 முகாமைத்தவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பரில் சேவையில் இருந்து விலகிய அதிகாரியிடமிருந்து வசூலிக்க வேண்டிய கடன் மீதி ரூபா 183,440 ஆனது, கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 13 வரை வசூலிக்கப்படவில்லை. | இந்த அதிகாரியிடமிருந்து கடனை மீளப் பெறுவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலுவையில் உள்ள கடன் தொகையை உடனடியாக வசூலிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 118 இன் பந்தி 3.2 இன் படி ஒரு அதிகாரி மாகாண சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டால் கடன் தொகையை சம்பந்தப்பட்ட மாகாண சபையிலிருந்து உடனடியாக வசூலிக்க வேண்டிய போதிலும், மத்திய மாகாண சபைக்கு மாற்றப்பட்ட ஒரு அதிகாரியிடமிருந்து பெற வேண்டிய கடன் மீதியான ரூபா 207,432 ஆனது 2023 மார்ச் 13 கணக்காய்வு திகதி வரை வசூலிக்கப்படவில்லை. . | இது தொடர்பில் மத்திய மாகாண சபைக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டதுடன் முற்பண பீ கணக்கிற்கு திறைசேரியில் இருந்து பணம் வழங்கப்பட்டவுடன் அதற்கான கடன் மீதிக்கான பணம் வழங்கப்படும் என அவர்களால் தெரிவிக்கப்பட்டது. | நிலுவையில் உள்ள கடன் தொகையை உடனடியாக வசூலிக்க வேண்டும். |

**3. மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் சிரேஷ்ட நிலையில் 02 வெற்றிடங்களும் மூன்றாம் நிலையில் 02 வெற்றிடங்களும இரண்டாம் நிலையில் 05 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப நிலையில் 03 வெற்றிடங்களும் காணப்பட்டன. | சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலையில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு பல தடவைகள் பொது நிர்வாக அமைச்சிடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டிருந்துடன் இரண்டாம் நிலையின் வெற்றிடங்கள் தொடர்பாக பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது்.லை ஆரம்ப நிலையின் வெற்றிடங்களுக்காக பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணியால் இணைக்கப்படுவதற்கு பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. | செயல்திறனைப் பாதிக்கக்கூடிய வெற்றிடங்கள் இருந்தால், அவை நிரப்பப்பட வேண்டும். |